மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடஆற்காடு, செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஊட்டசத்து அலுவலர் பதவி நிரப்பப்படாமல் காலியாக இருந்தது.

(ஆ) நிரப்பப்படாமல் காலியாக இருந்த மேற்படி பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ள போதிலும், இத்திட்டத்தின் பணிகளின் முக்கியத்துவம் கருதி, இப்பதவிகள் துறையில் உள்ள அலுவலர் களைக் கொண்டு கூடுதல் பொறுப்பு அளித்து தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

604—(* வினா எண் 12069) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 1987 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறுத்தப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1987-ல் முடிவடைய இருந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை 31—3—1988 வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் பஞ்சாயத்து யூனியன் முடிகொண்டான் ஆற்றில் படுகை அணை.

605—(* வினா எண் 7971) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் வாய்க் கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் ஒரு படுகை அணை கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.